**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 131/2019**

PW1 – விமலா க/பெ பாலகிருஷ்ணன்
நாள் – 09.01.2024.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி :</u>**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

தாவா சொத்தை 17.06.1982–ல் 1–ம் வாதி பெயரில் கிரயம் பெற்றதற்கான கிரயப் பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவா சொத்தை 10.04.1990–ல் 2–ம் வாதி பெயரில் கிரயம் பெற்றதற்கான கிரயப் பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது** (மேற்படி வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 அசல் ஆவணம் குறியீடு செய்யப்படவில்லை என ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனை பேரில் குறியீடு செய்யப்படுகிறது). 13.03.2019 ஆம் தேதியிட்ட இரண்டாம் வாதி பெயரில் உள்ள வீட்டுவரி ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 22.09.1997 ஆம் தேதியிட்ட 1–ம் வாதி பெயரில் உள்ள மனைவரி தோராயப்பட்டாவின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 04.07.2022 ஆம் தேதியிட்ட எனது கணவர் DGP–க்கு கொடுத்த புகாரின் கையுருப்பு நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 19.09.2022–ல் எனது கணவர் காவல் துறை தலைமை இயக்குநருக்கு அனுப்பிய புகாரின் கையிருப்பு நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 19.09.2022 தேதியிட்ட நான் திருவெண்காடு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் கையிருப்பு நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 20.09.2019 தேதியிட்ட எனது கணவர் திருவெண்காடு காவல் நிலையத்தில் கொடுத்த கையிருப்பு நகலை

தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 19.09.2022 தேதியிட்ட திருவெண்காடு காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகாரின் Status நிலையை இணையவழி நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை பேரில் குறியீடு செய்யப்படுகிறது). தாவா சொத்தை காட்டக்கூடிய புகைப்படங்கள் 17 (எண்ணிக்கை) மற்றும் CD ஒன்று தாக்கல் செய்கிறேன். **அஅது வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (பிரதிவாதிகள் தரப்பில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65-B படியான சான்று இல்லை என ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனை பேரில் குறியீடு செய்யப்படுகிறது )

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணையை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.